032418

பள்ளிகல்வித் துறை
தலைமைச் செலயகம்,
சென்னை-600 009.

**கடித எண்.3919/ப.க.4(1)/2024-1, நாள்.29.05.2024**

அனுப்புநர்
திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை-01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

பள்ளிக்கல்வி இயக்குநர் அலுவலகம் 30 MAY 2024 சென்னை-600 006

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி - 2012-2013ஆம் ஆண்டு அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் - நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டது - 4393 ஆய்வக உதவியாளர் பணியிடம் 1764 மற்றும் இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 தற்காலிக பணியிடங்களுக்கு 18.02.2024 முதல் தொடர் நீட்டிப்பு ஆணை வெளியிடப்பட்டுள்ளது - 19.05.2024 முதல் 18.11.2024 வரை ஆறு மாதத்திற்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல் - தொடர்பாக.

பார்வை
1. அரசாணை (நிலை)எண்.277, பள்ளிக் கல்வி (சி.2) துறை, நாள்30.10.2012.
2. அரசாணை (நிலை)எண்.62, பள்ளிக் கல்வி (அகஇ) துறை, நாள்16.05.2014.
3. அரசாணை(1டி) எண்.87, பள்ளிக் கல்வி (ப.க.4(1)த் துறை, 21.06.2021.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.006743/ எல்/இ3/2021, நாள்22.04.2024.

**********

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டவாறு ஏற்கனவே இயங்கி வரும் உயர்நிலைப் பள்ளிகளுக்கென ரூ.4800-10000 + தர ஊதியம் ரூ.1300/- என்ற விகிதத்தில் 4393 ஆய்வக உடனாள் பணியிடங்கள் மற்றும் ரூ.5200-20200 + தரஊதியம் ரூ.2400/- என்ற ஊதிய விகிதத்தில் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், ஆய்வக உடனாள் என்ற பணியிடம் ஆய்வக உதவியாளர் என்ற பணியிடமாக மாற்றி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலும், பார்வை மூன்றில் காணும் அரசாணையில், 6157 பணியிடங்களுக்கு 19.02.2021 முதல் 18.02.2024 வரை 3 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு ஆணை பெறப்பட்டு முடிவடைந்துள்ள நிலையில் 19.02.2024 முதல் 18.05.2024 வரை மூன்று மாதத்திற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு (Express pay order) பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆணை வெளியிடப்பட்டுள்ளதாகவும் மேலும், அரசாணை (நிலை) எண்.(டி) 271, நிதித்துறை (CMPC) நாள் 18.08.2022-இன்படி அமைக்கப்பட்ட குழுவால் இப்பணியிடங்களை நிரந்தரம் செய்து அரசாணை வெளியிடப்படவுள்ள நிலையில், மேற்குறிப்பிட்டுள்ள 4393 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 பணியிடங்களுக்கு 19.05.2024 முதல் மேலும் ஆறு மாதங்கள் தொடர் ஊதியக் கொடுப்பாணை (Pay Authorisation) வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மேற்குறிப்பிட்டுள்ள 4393 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 பணியிடங்களுக்கு 19.05.2024 முதல் 18.11.2024 வரை மேலும் ஆறு மாதங்கள் தொடர் நீட்டிப்பு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorisation) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இக்கடிதம் இத்துறையின் மின்கோப்பு எண்.e-file No.3919/ப.க.4(1)/2024-1, நாள் 28.05.2024-ன்படி நிதித்துறையிடம் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

30.5.2024

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு செயலாளருக்காக.

30/05/24

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
நிதி (கல்வி-II)த்துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல் :-

இயக்குநரக ந.க.எண். 006743/எல்/இ3/2021.

நாள் :- 22.04.2024.

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது

பெறுநர்:

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

இணை இயக்குநர்

30/5/2024